உலகத்தமிழ்
உலகத் தமிழ்ச் சங்கம் மதுரை வழங்கும் மின்னிதழ்



# வாழ்க்கையை எதிர் நோக்கும் திருக்குறள்

**முனைவர் கா.மு.சேகர்**
இயக்குநர், உலகத் தமிழ்ச் சங்கம், மதுரை.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

என்று எட்டயப்புரத்து பாட்டுப்பாட்டன் பாரதி பாடுகின்றான். இருபது நூற்றாண்டுக்குப் முன் சங்கம் மருவிய காலம் என்ற இலக்கிய வரலாற்றிலே திருக்குறளுக்கு முதன்மையான இடம் உண்டு. தமிழர் வரலாற்றின் பெருமையை உலகுக்கு அறிவித்த ஒப்பற்ற நூல் திருக்குறள். இதன் மூலம் மனிதகுலம் முழுவதும் உயர்வடைகின்ற நெறியை உலக மக்கள் அனைவரும் உணரக் கூடியதாகப் பாடியுள்ளார். இதனாலேயே உலகின் பெரும்பான்மை மொழிகளில் பெயர்க்கப்பட்டு உலகம் முழுவதும் இக்கருத்துகளை அறிந்து கொள்ள வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளனர் அறிஞர் பெரும்மக்கள்.

கற்றதனால் ஆய பயனையும், சிறந்த பண்பாட்டு வாழ்வையும் திருக்குறள் மூலம் உணரமுடிகிறது. குடும்ப நலன் பேணும் இல்லறத்தானாக முதலிலும், துறவு நலன் விழையும் முனிவனாக அடுத்தும், நாட்டுநலம் பேணும் அரசனாக இடையிலும், காதல் நலம் பேணும் இளங்காளையாக முடிவிலும் காட்சி தருகிறார் வள்ளுவர். எந்நிலையில் நிற்பவர்க்கும் வாழ்வாங்கு வாழ வழிவகுத்துத் தந்தவர் அவர். மனிதன் எப்படியும் வாழலாம் என்ற நினைப்பை விடுத்து இப்படித்தான் வாழவேண்டும் என்று திட்டமிட்டுக் கொடுத்தவர் இவர்.

வள்ளுவருக்கு முன்பு நூல் எழுதியவர்கள் அந்தக் காலங்களில் நடைமுறையில் இருந்த வாழ்க்கை முறையை அப்படியே சித்திரித்துப் பாடல்களை ஆக்கி வைத்தார்கள். ஆனால் வள்ளுவர் எப்படி வாழ வேண்டும் என்று எடுத்துக்காட்டி எழுதிவைத்தார். சமுதாயத்தில் தான் கண்ட குறைகளையும் நிறைகளையும் நோக்கி செப்பஞ்செய்து சிந்தித்து எழுதினார். இவர் காலத்தில் தமிழ் நாட்டில் நிறையக் கருத்துப் பூசல்கள் இருந்தன. சமணர்கள், பௌத்தர்கள், மாயாவாதிகள் என்போர் தமிழ் நாட்டில் இடம்பெற்றுத் தமது கொள்கைக்குள் தமிழர்களை இழுக்க முயன்றார்கள். பல்வேறுப்பட்ட கருத்துகளையும் தமிழர் தம் செவியில் ஏற்க வேண்டியிருந்தது. ஆனால் தமிழ் நாட்டிற்கும், பாரம்பரியத்துக்கும் ஏற்றவையா இவையென்பதை அறிந்து தெரிந்து கொள்வதே அறிவு என்பதை,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்று பாடினார். அதாவது ஒருவர் கருத்தைச் சொல்பவர்கள் யார் என்பதை ஆராயாமல், அவர் சொன்ன கருத்து என்ன என்பதை ஆராய்தலே நலம் என்பது வள்ளுவர் கருத்து. சமய ரீதியிலே நாம் எடுத்துப் பார்த்தாலும் எல்லா மதத்தினருக்கும், எல்லா இனத்தினருக்கும், எல்லா இடத்தினருக்கும் ஏற்ற முறையில் பொதுக் கடவுள் வணக்கத்தையே அவர் வலியுறுத்தினார்.

குறிக்கோள் இல்லாத ஆரவாரச் சடங்குகள் யாக வேள்விகள் ஆகியவற்றில் காலம் கழித்தலிலும், பார்க்க புனித நினைப்பினாலும், உயிர் கொல்லாமையிலும், நல்லொழுக்க சீலத்தினாலும் வாழ்க்கை முறையை உயர்த்த வேண்டும் என்பது குறள் தரும் விளக்கமாகும். உயிர்களைப் பலியிட்டு ஆயிரமாயிரம் வேள்விகளைச் செய்து சமய வழிபாடாற்றிய வேதகால முறைமைக்கு மறுப்புத் தெரிவிக்கின்றார் வள்ளுவர். அதுவுமன்றி கள்ளுண்ணல், புலால் உண்ணல் பரத்தையிற் சேறல் ஆகியவை தமிழர் வாழ்வில் இடம் பெற்றமைக்குக் கடுமையாகச் சாடி எதிர்த்துள்ளார். ஆகவே தான் வள்ளுவன் ஒரே குறளில் வாழ்க்கைக்கான ஒட்டுமொத்த நெறிமுறையைப் பாடி முடிக்கிறார். அது

**"மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்**
**பழித்தது ஒழித்து விடின்"**

என்ற குறளாகும்.

கல்வி, ஒழுக்கம், வள்ளன்மை, வாய்மை என்பவை பற்றி வள்ளுவர் காட்டிய வழிகளை,

**"கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக"**

கற்றலின் பயன் நிற்றல் என்பதைக் கூறி கல்வியின் இன்றியமையாமையை, மேலும் விளக்குகிறபோது கற்றிலனாயினுங் கேட்க என்றார். நீ நேரடியாகப் படித்துச் செய்திகளைத் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லாமற் போனாலும், உன்னை வாழ்வித்துச் செழுமைப்படுத்தி உருவாக்குகின்றதும், உள்ளத்தைத் தூய்மைப் படுத்துவதுமான செய்திகளையும் சிந்தனைகளையும் கற்ற பெரியோர் வாயிலாக்க கேட்டாவது தெரிந்து கொள் என்கிறார். இதனால் அகவாழ்வில் புத்தம் புதிய மாறுதலும் ஏற்பட்டு ஒழுக்கப் பண்புகளும் வளரும். கேள்வியினால் பெரும் பயனீட்டிய நாடு எமது நாடு. இந்தத் திறனை மேலும் வளர்க்க வேண்டும் என்கிறார். நாட்டிலே வேற்றுமை உணர்ச்சி தலைதூக்காமல் இருக்க வேண்டுமானால் கல்வி அறிவு மேம்பட வேண்டும். கல்வி அறிவு என்பது மொழியின் மாத்திரம் பெறும் அறிவு அன்று. அது மொழியைக் கடந்து நிற்க வெண்டும். மொழியின் எல்லைக் கோட்டுக்குள் நிற்பதாற்றான் இன்று படித்தோரின் பலர் படிக்காதவர்களாகவும் விளங்குகிறார்கள். மனித குலத்தை நேசிக்கும் உணர்வும், வாழ்விக்கும் எண்ணமும் சேராவிட்டால் அக்கல்வியை அறிவுக்குரியதெனச் சொல்லிவிட முடியாது.

எனவே கல்வி வேறு, அறிவுடைமை வேறு என்று கருதி இரண்டு அதிகாரத்தில் அதனைக் கூறினார். கல்வி என்பது அறிவைப் பெறுதற்குத் துணை செய்யும் ஒரு கருவி. அது மனிதனை அறிவுலகத்துக்கு அழைத்துச் செல்லும். அந்த அறிவு வழிநின்று ஆவன செய்தலே பயனுடைத்து. வள்ளுவர் இதனை

அழகாகச் சிறப்பித்துக் கூறியுள்ளார். கல்வி அறிவு சிந்தனையினால் ஒழுக்கம் பேணப்படும். அதனை உயிரினும் மேலாகப் பேணவேண்டும். ஏனெனில் அதுவே மனித வாழ்வுக்கு விழுப்பந்தருகிறது. ஒழுக்கமில்லாத ஒருவன் குலம்பேசி, நலம் பேசிப் பெருமையடைய முடியாது. ஒழுக்கமுடையாரையே உயர்ந்தவர்கள் என்று உலகம் போற்றும் என்ற கருத்துகளை வலியுறுத்தி,

**"ஒழுக்க முடைமை குடிமை இழுக்கம்**
**இழிந்த பிறப்பாய் விடும்"**

என்றார்.

வள்ளன்மை பற்றிப் பேசும் போதும் சிறந்த கருத்து ஒன்றை வெளியிடுகிறார். உள்ளூர்ப் பழுத்த பயன் மரம் போலவும், ஊருணி நீர் நிறைந்திருப்பது போலவும், வள்ளல்கள் அமைவதனால் அது கொடுப்பவர்க்கே பெருமை தருகிறது. ஏற்போர் பயனடைவது போல் ஈவோரும் பயனடைகின்றனர். நடுக்காட்டில் அமைந்து சூரிய வெளிச்சம் படாது, இலைதழைகளால் மூடப்பட்டிருக்கும் நீர்க்குட்டை போன்று தேங்கி நிற்கும் செல்வத்தால் யாருக்குப் பயன்? முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி. மயிலுக்குப் போர்வை கொடுத்தான் பேகன். பொன்னும், மணியும் இன்ன பிறவும் வாரிவழங்கினார்கள் வள்ளல்கள் என்றெல்லாம் 'சங்கத் தமிழ்' பேசியது. வள்ளுவர்,

**"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது**
**ஊதியம் இல்லை உயிர்க்கு"**

ஈத்துவக்கும் இன்பமே உண்மையான இன்பம். அதனால் பேரறிவாளன் திரு ஊருணி நீர் நிறைந்தது போல் அமைய வேண்டும். ஏற்போர் கூட்டம் நாட்டிலே அதிகமாக இருக்குமானால் அங்கே பசிப்பிணி அதிகமென்பதே கருத்து. அந்த நிலைக்கு நாடு ஆளாகக் கூடாது. நாடு முழுவதிலும் செல்வம் பரவ வேண்டும். பசிப்பிணி அகல வேண்டும். ஏழைகள், வள்ளல்கள் என்ற வேறுபாடு ஒழிய வேண்டும். எல்லோரும் வாழ்க்கை வளம் பெறவேண்டும் என்ற எண்ணமே வள்ளுவர் உள்ளக் கிடக்கையாகும். பழந்தாங்கி நிற்கும் பயன் மரங்கள் எல்லாம் தமது கனிகளை இன்னார் இனியார் என்று நோக்காது, எல்லார்க்கும் உதிர்த்துக் கொடுக்கின்றன. நட்டவனுக்கோ, வேலியிட்டவனுக்கோ, நீர் பாய்ச்சியவனுக்கோ என்று பாராமல் கனிகளை சமுதாயத்துக்கு நல்குவதுபோல பணம் படைத்தவர்களும் சமநோக்கோடு, சமுதாயத்துக்கு உதவவேண்டும் என்பது அவர் கருத்து.

வாய்மையைப் பற்றிக் கூறுகின்றபோது உள்ளத்தை உள்ளபடி சொல்லுவது மாத்திரம் வாய்மை என்று சொல்லிவிட முடியாது. அது சில சமயம் பொய்ம்மையாகவும் அமையலாம் என்பதை எடுத்துக்காட்டி.

**"வாய்மை யெனப்படுவது யாதெனில் யாதொன்றும்**
**தீமை யிலாச் சொலல்"**

என்று பாடினார். அடுத்தவனுக்குத் தீமை தருவதாக இருந்தால் உள்ளதை உள்ளபடி சொன்னாலும், அது வாய்மை ஆகாது. எனவே செயலை நோக்கிச் சொல்லின தன்மை அமைகிறது என்பது அவர் கருத்து.

எனவே வள்ளுவர் காட்டிய வழியை நாம் நோக்கும்போது அங்கே ஒழுக்கமும், உயிர் கொல்லாமையும், வள்ளன்மையும், வாய்மையும் ஒங்கி நிற்கும் ஒரு அறவாழ்வு காட்டடப்பட்டுள்ளது, எனவே நாமும் குறள் நெறியைப் பின்பற்றி வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைப்போமாக.

**"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து வேண்டும் பனுவல் துணிவு"**


utsmdu2@gmail.com

# உலகத்தமிழ்

**உலகத் தமிழ்ச் சங்கம் வழங்கும் மின்னிதழ்**


((((((((((()))))))))))